Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி, அக்டோபர் 16, 2026 | இதழ் 186

## மாலத்தீவு அதிகாரிகளால் தூத்துக்குடி மீனவர்கள் 25 பேர் சிறைபிடிப்பு.! தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்க கோரி முதல்வர் விஜய் கடிதம்




சென்னை, 16 அக்டோபர் 2026: மாலத்தீவு கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்ட தூத்துக்குடி மீனவர்கள் 25 பேரை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க கோரி, முதல்வர் விஜய் ஒன்றிய அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளார். கடந்த அக்டோபர் 13 அன்று 3 மீன்பிடி விசைப்படகுகளுடன் மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்கள் 25 பேர் மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர். தருவைக்குளத்தில் இருந்து 3 விசைப் படகுகளில் மொத்தம் 30 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

தருவைக்குளத்தைச் சேர்ந்த மிக்கேல், ராஜன், சங்கர் ஆகியோரது விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். தடை செய்யப்பட்ட பகுதியில் மீன் பிடித்ததாகக் கூறி, தூத்துக்குடி மீனவர்கள் 30 பேரை மாலத்தீவு கடற்படை சிறைபிடித்ததால் கிராம மக்கள் மற்றும் மீனவர் சங்கத்தினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழக அரசு உடனடியாக தலையிட்டு மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுத்தனர்.

இந்த நிலையில் மாலத்தீவு கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 25 மீனவர்களை விடுவிக்கவும். அவர்களின் 3 மீன்பிடி விசைப்படகுகளை மீட்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கோரி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, முதல்வர் விஜய் கடிதம் எழுதி உள்ளார்.

மாலத்தீவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும் அவர்களின் விசைப்படகுகளையும் பாதுகாப்பாக மீட்டு, அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இணைய ஒன்றிய அரசு உடனடியாக தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் விஜய் கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

## டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளை நினைவுகூர்ந்து போற்றி வணங்குகிறேன்: முதல்வர் விஜய்




சென்னை 16, அக்டோபர் 2026: டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளை நினைவுகூர்ந்து போற்றி வணங்குகிறேன்: முதல்வர் விஜய் என்று அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவின் அறிவியல் வளர்ச்சிக்கும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் கனவுகளுக்கு ஊக்கமளித்து, அவர்களின் இலட்சியப் பயணத்திற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த ஏவுகணை நாயகன், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளில், அவர் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளை நினைவுகூர்ந்து போற்றி வணங்குகிறேன்.

இஸ்ரோ விஞ்ஞானி, இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர், குடியரசுத் தலைவர் எனப் பல்வேறு உயரிய பொறுப்புகளை வகித்த போதிலும், 'ஆசிரியர்' என்ற அடையாளத்தையே தன் வாழ்வின் மகுடமாகக் கருதி, இறுதி மூச்சுவரை மாணவர்களின் முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த அம்மா மனிதரின் எளிமை, நேர்மை, அறிவியல் சிந்தனை என்றும் போற்றுதலுக்குரியவை.

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் உயரிய சிந்தனைகளையும், தொலை நோக்குப் பார்வையையும் நம் மனதில் நிறுத்தி, வளமான மற்றும் வலிமையான இந்தியாவை உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம் என்று அவர் பதிவிட்டுள்ளார்.

## தமிழக ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பொறுப்பேற்றார்!




சென்னை 16, அக்டோபர் 2026: தமிழ்நாட்டின் முழு நேர ஆளுநராக ஆர்.வி. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பொறுப்பேற்று கொண்டார்.

கடந்த 6 மாதங்களாக தமிழகத்தின் பொறுப்பு ஆளுநராக செயல்பட்டு வந்த அர்லேகர் இன்று தமிழகத்தின் முழு நேர ஆளுநராக பொறுப்பேற்று கொண்டார்.

தமிழக ஆளுநராக இருந்த ஆர்.என். ரவி மேற்கு வங்க ஆளுநராக கடந்த மார்ச் மாதம் மாற்றப்பட்டார்.

இதையடுத்து கேரள ஆளுநராக இருந்த ஆர்.வி. ஆர்லேகருக்கு தமிழகத்தின் ஆளுநராக கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில், அவரை தமிழகத்தின் முழுநேர ஆளுநராக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து தமிழகத்தின் முழுநேர ஆளுநராக ஆர்.வி. ஆர்லேகர் சென்னை ஆளுநர் மாளிகையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## ஹார்முஸ் ஜலசந்தியில் தொடரும் பதற்றம் 2,500 கண்டெய்னர்களுடன் சென்ற சரக்கு கப்பலை கண்ணிவெடி மூலம் மூழ்கடித்த ஈரான்...!



சென்னை, 16 அக்டோபர் 2026: ஈரானின் ஹார்முஸ் ஜலசந்தி அருகே கண்ணிவெடி, ஏவுகணை தாக்குதலில் அடுத்தடுத்து 2 சரக்கு கப்பல்கள் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டது. இதனால் மீண்டும் ஹார்முஸ் ஜலசந்தியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதலை தொடங்கியது. ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இந்த போர் தொடங்கியதில் இருந்து ஹார்முஸ் ஜலசந்தியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இந்த ஜலசந்தியை நிர்வகிப்பதில் ஈரான்-அமெரிக்கா இடையே போட்டி உள்ளது.

அமெரிக்காவில் நவம்பர் 3ம் தேதி இடைக்கால தேர்தல் நடைபெற உள்ளது. இதில், அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்பை தோற்க வேண்டும் என ஈரான் விரும்புகிறது. இதனால் ஈரான், ஹார்முஸ் ஜலசந்தியை முழுவதுமாக மூடி உள்ளது. இதன்மூலம் உலகம் முழுவதும் கச்சா எண்ணெய் சப்ளையை நிறுத்த முடியும். அதோடு பெட்ரோல், டீசல் விலையை ஏற்ற முடியும். ஏற்கனவே அமெரிக்காவில் டீசல் விலை உச்சம் தொட்டுள்ள நிலையில் ஈரானின் இந்த செயல் கூடுதலாக விலையை உயர்த்த வாய்ப்புள்ளது.

இது அமெரிக்காவின் இடைக்கால தேர்தலில் எதிரொலிக்கலாம் என்று ஈரான் நினைக்கிறது. இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுவதுமாக ஈரான் மூடியுள்ளது. அதே போல் ஹார்முஸ் ஜலசந்தியில் மாற்று பாதை ஒன்றிலும் கப்பல் போக்குவரத்தை தடை செய்ய ஈரான் கண்ணிவெடிகளை வைத்துள்ளது. இந்நிலையில் தான் கடந்த 24 மணி நேரத்தில் ஹார்முஸ் ஜலசந்தி அருகே 2 சரக்கு கப்பல்கள் அடுத்தடுத்து மூழ்கடிக்கப்பட்டுள்ளது. அதாவது, சிங்கப்பூர் நாட்டு கொடியுடன் சென்ற ஜிஎஃப்எஸ் பிரைட் என்ற பெயர் கொண்ட கன்டெய்னர் கப்பல் தீப்பிடித்து எரிந்து கடலில் மூழ்கியுள்ளது. இந்த கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியில் ஈரானால் தடை செய்யப்பட்ட கடல்வழி பாதையில் பயணித்துள்ளது. அங்கிருந்த கண்ணிவெடி வெடித்ததில் கப்பல் தீப்பிடித்து கடலில் மூழ்கியுள்ளது.

இந்த கப்பல் 2,500 கன்டெய்னர்களுடன் பயணித்த நிலையில் தண்ணீரில் மூழ்கியது. கப்பலில் இருந்த 21 பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதனை சிங்கப்பூர் கடல்சார் மற்றும் துறைமுக ஆணையம் உறுதி செய்துள்ளது. அதேபோல் இன்னொரு சம்பவத்தில் ஆண்டிகுவா - பார்புடா நாட்டு கொடியுடன் சென்ற கேப்டாவ் கப்பலும் ஹார்முஸ் ஜலசந்தி அருகில் மூழ்கியது. இதில் ஒரு பணியாளர் உயிரிழந்தார். மற்றவர்கள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். கடந்த மாதம் 23ம் தேதி இந்த கப்பல் ஏவுகணையால் தாக்கப்பட்டிருந்தது. அதில் தப்பிய இந்த கப்பல் தற்போது நீரில் மூழ்கியுள்ளது. இதனால் தற்போது ஹார்முஸ் ஜலசந்தியில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

## ஒலிம்பிக் போட்டிகளை நடத்த இந்தியா விரும்புகிறது - பிரதமர் மோடி

சென்னை 16, அக்டோபர் 2026: ஆசிய விளையாட்டு போட்டி சமீபத்தில் ஜப்பானில் நடந்தது. இதில் 21 தங்கம்,27 வெள்ளி, 37 வெண்கலம் என மொத்தம் 85 பதக்கம் பெற்று நான்காவது இடம் பிடித்தது. வில்வித்தை, மல்யுத்தம், குத்துச்சண்டை உள்ளிட்டவற்றில் பதக்கங்கள் கிடைத்தன. இந்திய வீரர்களுக்கு தலைவர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

கவுரவம் - பதக்கம் வென்ற வீரர்கள் அனைவரும் டில்லியில் பிரதமர் மோடியை சந்தித்தனர். அவர்களுடன் பிரதமர் கலந்துரையாடியதுடன் கவுரவித்தார். பின்னர் அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

சாதனை - அவர்கள் மத்தியில் பிரதமர் மோடி பேசியதாவது: ஆசிய விளையாட்டு போட்டி எப்போதும் நமது நினைவில் இருக்கும். நமது ஆண்கள் மற்றும் பெண்கள் ஹாக்கி அணி தங்கம் வென்றது. 44 ஆண்டுகளுக்கு பிறகு நமது பெண்கள் அணி தங்கப் பதக்கத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்தது. கிரிக்கெட்டில் ஆண்கள் மற்றும் பெண்கள் அணியும் தொடர்ச்சியாக இரண்டாவது முறை பதக்கம் வென்று சாதனை படைத்தது. அதே போல் கபடியிலும் இரு அணிகளும் தங்கம் வென்றது. வில்வித்தையில் இந்தியாவுக்கு 5 தங்கம் கிடைத்தது. நமது தடகள வீரர்கள் புதிய சாதனை படைத்தனர் 28 ஆண்டுகளுக்கு பிறகு பளு தூக்குதலில் நமக்கு பதக்கம் கிடைத்தது.

கேலோ இந்தியா திட்டத்தையும், விளையாட்டு கூட்டமைப்பை வலுப்படுத்தவும் 36 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கி உள்ளது. இன்று நாடு முழுவதும் கேலோ இந்தியா மையங்கள் திறக்கப்பட்டன. மைதானங்கள், மினி மைதானங்கள்,, விளையாட்டு துறை சார்ந்த அரங்கங்கள் கட்டமைக்கப்பட்டன. தடகள டிராக்குகள், கால்பந்து மைதானங்கள், ஹாக்கி மைதானங்கள் மற்றும் நீச்சல் குளங்கள் ஆகியன கட்டமைக்கப்பட்டன.

ஒலிம்பிக் -வரவிருக்கும் விளையாட்டு போட்டிகளுக்கான நமது ஆயுத்தங்களை வலுப்படுத்த வேண்டும். 2028 ம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்கும் ஒலிம்பிக், 2030ம் ஆண்டு காமன்வெல்த் போட்டிகளை நடத்துவதோடு, 2036 ல் ஒலிம்பிக் போட்டிகளை நடத்தவும் இந்தியா விரும்புகிறது. அதனை நடத்துவோம் என நம்புகிறோம். திறமைகளை கண்டறிந்து வளர்ப்பதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் சென்றடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆசிய விளையாட்டில் இந்தியாவுக்கு கிடைத்த வெற்றியானது, நாட்டின் மனப்பான்மையை பிரதிபலிக்கிறது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## மஹிந்திராவின் புத்தம்புதிய BLAZO i-TRK: இந்தியாவில் அதிக லாபகரமான மற்றும் அதிநவீன ஸ்மார்ட் டிரக்கிங் துறையில் புதிய மைல்கல்

சென்னை 16, அக்டோபர் 2026: மஹிந்திரா குழுமத்தின் ஒரு பகுதியான மஹிந்திரா டிரக் அண்ட் பஸ், இன்று முற்றிலும் புதிய BLAZO i-TRK அறிமுகத்தை அறிவித்துள்ளது. இது 'ப்ராஃபிட் கா ராக்கெட்' என்ற ஒற்றை வாக்குறுதியை மையமாகக் கொண்டு, டிரான்ஸ்போர்ட்டர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட புதிய தலைமுறை ஹெவி கமர்ஷியல் டிரக் ஆகும்.

வெறும் டிரக்காக மட்டுமில்லாமல், ஒரு முழுமையான வணிகத் தீர்வாகவே பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள BLAZO i-TRK, அதன் பிரிவிலேயே சிறந்த எரிபொருள் சிக்கனம், உயர் செயல் திறன் கொண்ட பவர் டிரெய்ன், அறிவார்ந்த கனெக்டெட் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில்துறையில் முன்னணியில் உள்ள ஆப்டைம் கேரண்டி ஆகியவற்றை ஒருங்கிணைக்கிறது.

இது வாடிக்கையாளர்கள் தங்கள் வருவாயை அதிகரிக்கவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், இயக்கச் செலவுகளைக் குறைக்கவும், தங்களது வாகனங்களின் மீது சிறந்த கட்டுப்பாட்டைச் செலுத்தவும் உதவுகிறது.

BLAZO i-TRK ஆனது வாடிக்கையாளர்களுக்கான மூன்று சக்தி வாய்ந்த உறுதிமொழிகளை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது:

அதிகமாகச் சம்பாதிக்கலாம் (எர்ன் மோர்)

10% வரை கூடுதல் எரிபொருள் சிக்கனத்தை வழங்கும் BLAZO i-TRK, ஏஐ-தொழில்நுட்பத்துடன் கூடிய 'iFUELSMART auto drive' மோட், டர்போ மேக்ஸ், டர்போசார்ஜர், ஆப்டிஃப்யூல் ஏர் கம்ப்ரஸர் மற்றும் பல



வன்பொருள் (ஆர்ட்வேர்) தீர்வுகள் மற்றும் மென்பொருள் (சாஃப்ட்வேர்) கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியுள்ளது.

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சொட்டு எரிபொருளிலிருந்தும் அதிகபட்ச மதிப்பைப் பெற உதவுகின்றன. இந்த ஒட்டுமொத்த சேமிப்புகள் ஐந்து ஆண்டுகளில் ஒரு டிரக்கிற்கு ரூ.15 லட்சம்* வரை கூடுதல் லாபத்தை வழங்கக் கூடும், இது வாடிக்கையாளர்கள் தங்களது வணிகத்தை விரைவாக வளர்க்க உதவுகிறது.

அதிகமாக இயக்கலாம் (ரன் மோர்)

BLAZO i-TRK மாடல் வரம்புகள் அனைத்திலும் மஹிந்திராவின் நம்பிக்கையான மற்றும் மிகச் சிறந்த 320 ஹெச்பி எம்பவர் எஞ்சின் பொருத்தப்பட்டுள்ளது. இது வலுவான செயல்திறன், அதிக நம்பகத் தன்மை மற்றும் சிறந்த உற்பத்தித் திறனை வழங்குகிறது. மேம்படுத்தப்பட்ட ஓட்டுநர் வசதி - COM FiMAXX சஸ்பென்டட் சீட், EzyCruise க்ரூஸ் கண்ட்ரோல், கைகளைப் பயன்படுத்தாமல் பாதுகாப்பாகப் பேசுவதற்கான மைக் வசதியுடன் கூடிய ப்ளூடூத் மியூசிக் சிஸ்டம், விசாலமான, பிரீமியம் மற்றும் சௌகரியமான ஏசி கேபின் - ஆகியவற்றின் மூலம் நீண்ட தூரப் பயணங்களின் போது ஓட்டுநர்களின் உற்பத்தித்திறனைத் தக்கவைத்து, வாகனங்களை அதிக திறனுடன் கூடுதல் பயணங்களை நிறைவு செய்ய அனுமதிக்கிறது.

## இந்திய நுகர்வோருக்கு அதிக தேர்வுகளை வழங்கவும், ஊட்டச்சத்து நன்மைகளை மேம்படுத்தவும், புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவும் தனது தயாரிப்புகளில் மாற்றங்களைக் கொண்டுவரும் பெப்சிகோ இந்தியா நிறுவனம்

புதுதில்லி 16, அக்டோபர் 2026: பெப்சிகோ இந்தியா தனது உணவு மற்றும் பானங்கள் வணிகத்தை தொடர்ந்து வளர்த்து வரும் நிலையில், இந்திய மக்களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தனது தயாரிப்புகளிலும் தொடர்ந்து மாற்றங்களைக் கொண்டுவந்து வருகிறது. மக்கள் விரும்பும் சுவையைத் தக்க வைத்துக்கொள்வதுடன், உடல்நலனில் அவர்கள் காட்டும் அதிகரித்து வரும் அக்கறையையும் கருத்தில் கொண்டு புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தி வருகிறது. ஏற்கெனவே உள்ள தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களின் கலவையில் மாற்றங்கள் செய்வது, புதிய வகைகளை அறிமுகப்படுத்துவது, பல்வேறு மூலப் பொருட்களைப் பயன்படுத்துவது எனப் பல வழிகளில் இதைச் செய்கிறது. மேலும், ஒவ்வொரு தயாரிப்பிலும் என்னென்ன ஊட்டச்சத்துகள் உள்ளன, அதன் சிறப்பம்சங்கள் என்ன என்பன போன்ற தகவல்களையும் மக்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்கிறது. இதன் மூலம், தங்கள் விருப்பத்துக்கும் தேவைக்கும் ஏற்ற உணவு மற்றும் பானங்களைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு கூடுதல் வாய்ப்புகளும் தேவையான தகவல்களும் கிடைக்கின்றன.

பெப்சிகோ இந்தியா தனது பானங்களில் குறைந்த மற்றும் மிதமான கலோரி கொண்ட வகைகளை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது. தற்போது, அந்நிறுவனத்தின் பான வகைகளில் 70%-க்கும் அதிகமானவை சர்க்கரை சேர்க்கப்படாத




அல்லது மிதமான கலோரி கொண்ட பானங்களாக உள்ளன. இதை படிப்படியாக 90-100% ஆக உயர்த்துவதை நிறுவனம் இலக்காகக் கொண்டுள்ளது. இதற்காக, ஏற்கெனவே உள்ள பானங்களின் தயாரிப்புக் கலவையில் மாற்றங்களைச் செய்வதுடன், குறைந்த சர்க்கரை மற்றும் சர்க்கரை சேர்க்கப்படாத பானங்களின் தேர்வுகளையும் அதிகரித்து வருகிறது. பெப்சி பிளாக், 7அப் ஜீரோ சுகர், கேடோரேட் ஜீரோ மற்றும் நிம்பூஸ் ஆகியவை இதற்கான எடுத்துக் காட்டுகள்.

உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை, ஊட்டச்சத்து நன்மைகள் கொண்ட பொருட்கள், பல்வேறு மூலப் பொருட்கள் மற்றும் புதிய தயாரிப்பு முறைகள் மூலம் மக்களுக்குக் கூடுதல் தேர்வுகளை வழங்கி வருகிறது பெப்சிகோ இந்தியா. 2026-ஆம் ஆண்டில், குவேக்கர் தயாரிப்புகளில் உள்ள புரதம், நார்ச்சத்து மற்றும் முழுத் தானியங்களின் நன்மைகளை மக்கள் இன்னும் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில், அவை புதுப்பித்து அறிமுகப்படுத்தப்பட்டன.

## ஏஐ+ ஸ்மார்ட்ஃபோன் வாடிக்கையாளர் கருத்துகளின் அடிப்படையில் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துகிறது

சென்னை 16, அக்டோபர் 2026: இந்தியாவில் உருவாக்கப்பட்ட ஸ்மார்ட்போன் பிராண்டான ஏஐ+ ஸ்மார்ட்ஃபோன், வாடிக்கையாளர்களின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்து, தனது தயாரிப்புகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்தி வருகிறது. கேமரா நிலைத்தன்மை, நெட்வொர்க் இணைப்பு மற்றும் சாதனத்தின் செயல்திறன் தொடர்பான கருத்துகளின் அடிப்படையில் மென்பொருள் புதுப்பிப்புகள், கூடுதல் சோதனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட விற்பனைக்குப் பிந்தைய சேவைகளை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

நோவா 2 நியோ 5ஜி, நோவா 2 பவர் 5ஜி, நோவா 2 அல்ட்ரா 5ஜி உள்ளிட்ட ஸ்மார்ட்போன்கள் பேட்டரி திறன், வடிவமைப்பு, கேமரா மற்றும் செயல்திறன் ஆகியவற்றுக்காக வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக, நோவா 2 அல்ட்ரா 5ஜி சாதனத்தின் கேமரா செயல்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் மென்பொருள் புதுப்பிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், ப்ராஜெக்ட் ஓப்பன் ரிவியூ திட்டத்தின் மூலம், புதிய சாதனங்கள் அறிமுகமாவதற்கு முன்பே தொழில்நுட்ப விமர்சகர்கள், உள்ளடக்க உருவாக்குநர்கள், பத்திரிகையாளர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள் மற்றும் நெறிமுறை சார்ந்த ஹேக்கர்கள் உள்ளிட்டோர் அவற்றைச் சுயாதீனமாக மதிப்பீடு செய்யும் வாய்ப்பை ஏஐ+ ஸ்மார்ட்ஃபோன் வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,000-க்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.




வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தும் வகையில், சமூக ஊடகங்கள் வாயிலாகப் பெறப்படும் புகார்கள் மற்றும் கருத்துகள் கண்காணிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட சேவைக் குழுக்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. புகாரின் தன்மை மற்றும் உதிரிபாகங்களின் இருப்பைப் பொறுத்து, பெரும்பாலான சேவைப் பிரச்சினைகளை மூன்று முதல் நான்கு நாட்களுக்குள் தீர்க்க நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. சேவை நிறைவடைந்த பின்னர் வாடிக்கையாளர் அனுபவங்களைப் பதிவு செய்து, எதிர்கால மேம்பாடுகளுக்குப் பயன்படுத்தவும் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து ஏஐ+ ஸ்மார்ட்ஃபோன் நிறுவனத்தின் பிராண்ட், சந்தைப்படுத்தல் மற்றும் வளர்ச்சிப் பிரிவின் தலைவர் Archi Gogoi கூறுகையில், "சிறந்த தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்கான முதல் படி, அதைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் கருத்துகளைக் கவனமாகக் கேட்பதே. அவர்களின் கருத்துகளின் அடிப்படையில் தயாரிப்புகள், மென்பொருள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம். வாடிக்கையாளர்களுக்காக மட்டுமல்லாமல், அவர்களுடன் இணைந்து தொழில்நுட்பத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம்" என்றார்.

## ஏஜியஸ் ஃபெடரல் லைஃப் இன்சூரன்ஸ், கிஃப்ட் சிட்டி யின் முதல் பல-நாணய ஆயுள் காப்பீட்டுத் திட்டமான 'ஆரம் அட்வாண்டேஜ்' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னை 16, அக்டோபர் 2026: இந்தியாவின் முன்னணி தனியார் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான ஏஜியஸ் ஃபெடரல் லைஃப் இன்சூரன்ஸ் (ஏஎஃப்எல்ஐ), கிஃப்ட் சிட்டியில் ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் முதல் பல-நாணய ஆயுள் காப்பீட்டுத் திட்டமான ஆரம் அட்வான்டேஜ் பிளான் திட்டத்தின் அறிமுகத்தை இன்று அறிவித்தது. வாடிக்கையாளர்கள் ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்பைப் பெறும் அதே வேளையில், அமெரிக்க டாலர்கள், யூரோக்கள் அல்லது பவுண்டுகளில் முதலீடு செய்யலாம்.

இந்த அறிமுகம், இந்தியாவின் முதல் சர்வதேச நிதிச் சேவை மையமான (ஐஎஃப்எஸ்சி) குஜராத் இன்டர்நேஷனல் ஃபைனான்ஸ் டெக்-சிட்டியில் (கிஃப்ட் சிட்டி) ஏஎஃப்எல்ஐ-ன் செயல்பாடுகளைத் தொடங்குவதைக் குறிக்கிறது, மேலும் சர்வதேச அளவில் பயணம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கான இந்த நிறுவனத்தின் வழங்கல்களை விரிவுபடுத்துகிறது.

ஆரம் அட்வான்டேஜ் பிளான் திட்டமானது, சர்வதேச பங்குகள், நிலையான வருமானம் மற்றும் தங்கம் உள்ளிட்ட பல்வேறு சொத்து வகைகளுக்கான அணுகலை வழங்குகிற ஒரு யூனிட் லிங்க்டு இன்சூரன்ஸ் பிளான் (யூஎல்ஐபி) ஆகும். இதன் மூலம் பல்வேறு புவியியல் பகுதிகள் மற்றும் முதலீட்டு வகைகளில் பல்வகைப்படுத்தல் சாத்தியமாகிறது.

இந்த திட்டம் பல்வகை பிரீமியம் செலுத்தும் விருப்பங்கள் மற்றும் நிதி உத்திகளை வழங்குகிறது. மேலும், பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பூட்டுதல் காலம் இல்லாத பகுதி திரும்பப் பெறும் வசதியையும், முதிர்வு நன்மைகள், லாயல்டி கூடுதல்கள் மற்றும் மரண பலன்களையும் வழங்குகிறது.

ஆரம் அட்வான்டேஜ் பிளான்

என்ஆர்ஐ கள், ஓசிஐ கள் மற்றும் பிஐஓ கள் உட்பட எந்தவொரு தேசிய இனத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கும், குடியிருப்பு நிலையைப் பொருட்படுத்தாமல், பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிடைக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட நாணயத்தைப் பொறுத்து, குறைந்தபட்ச முதலீட்டு அளவு 3,000 அமெரிக்க டாலர், 3,000 யூரோ அல்லது 3,000 பிரிட்டிஷ் பவுண்ட் ஆகும்.

இந்த வெளியீட்டைப் பற்றி கருத்து தெரிவிக்கையில், ஏஜியஸ் ஃபெடரல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி திரு. ஜூட் கோம்ஸ் கூறுகையில், "சர்வதேச நிதி ஆர்வங்களைக் கொண்ட வாடிக்கையாளர்கள், பல்வேறு நாணயங்கள் மற்றும் சந்தைகளில் முதலீடு செய்ய அனுமதிக்கும் தீர்வுகளை அதிகளவில் தேடுகின்றனர். ஆரம் அட்வான்டேஜ் பிளான், பல நாணய முதலீட்டு விருப்பங்களுடன் ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்பையும் இணைத்து இந்தத் தேவையை நிவர்த்தி செய்கிறது.

கிஃப்ட் சிட்டியில் நாங்கள் நுழைவது, மாறிவரும் நிதித் தேவைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட தீர்வுகளுடன் சர்வதேச சந்தைகள் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதற்கான ஒரு வலுவான தளத்தை எங்களுக்கு வழங்குகிறது."

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



## 'சர்வீசஸ் எக்ஸ்பிரஸ்' அறிமுகத்தின் மூலம் தென்னிந்தியாவிற்கு நடமாடும் சேவை மையத்தை கொண்டு வருகிறது ஸ்னைடர் எலக்ட்ரிக்!

சென்னை 16, அக்டோபர் 2026: 2026: உலகளாவிய ஆற்றல் தொழில்நுட்ப முன்னணியாளரான ஸ்னைடர் எலக்ட்ரிக், தென்னிந்தியாவில் 'சர்வீசஸ் எக்ஸ்பிரஸ்' திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் தனது நடமாடும் சேவை இன்னோவேஷன் மையத்தை 5 மாநிலங்கள் மற்றும் 20-க்கும் மேற்பட்ட நகரங்களுக்கு 120-க்கும் மேற்பட்ட நாட்களில் கொண்டு செல்லவுள்ளது. பெங்களூருவில் தொடங்கும் இந்த முயற்சியானது, ஸ்னைடர் எலக்ட்ரிக் நிறுவனத்தின் சேவை நிபுணத்துவம் மற்றும் தொழில்நுட்பங்களை இப்பகுதியில் உள்ள தொழில் துறை சந்தைகளுக்கு அருகில் கொண்டு சேர்க்கும். மேலும், முக்கியமான மின்சார சொத்துகளுக்கான (எலக்ட்ரிக் அஸெட்ஸ்) செயற்கை நுண்ணறிவு (ஏஐ) சார்ந்த கண்காணிப்பு, சாதனங்களின் செயல்பாட்டு நிலையை அடிப்படையாகக் கொண்ட பராமரிப்பு மற்றும் ஆயுட்கால தீர்வுகள் ஆகியவற்றின் நேரலை செயல்முறை விளக்கங்களையும் வழங்கும்.

பெங்களூருவில் நடைபெற்ற தொடக்க விழாவில் பேசிய ஸ்னைடர் எலக்ட்ரிக் இந்தியாவின் சேவைப் பிரிவு துணைத் தலைவர் திருமதி. தாமினி சவுத்ரி, "சர்வீசஸ் எக்ஸ்பிரஸ் என்பது எங்களது சேவைத் திறன்களைத் தொழில்துறைக்கு மிக அருகில் கொண்டு செல்லவும், நிஜ உலக செயல்பாட்டுச் சூழல்களில் அவற்றின் முக்கியத்துவத்தை நிரூபிக்கவும் எங்களுக்கு ஒரு நல்வாய்ப்பை வழங்குகிறது. செயல்பாட்டு நிலை சார்ந்த பராமரிப்பு, டிஜிட்டல் கண்காணிப்பு மற்றும் ஆயுட்கால சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், நிறுவனங்கள் தங்களின் முக்கியமான மின்சார சொத்துகளை எவ்வாறு முன்கூட்டியே நிர்வகிக்கலாம், நம்பிக்கைத் தன்மையை மேம்படுத்தலாம் மற்றும் எதிர்பாராத செயல்பாட்டு முடக்க நேரத்தைக் குறைக்கலாம் என்பதைப் புரிந்துகொள்ளச் செய்வதே எங்களது நோக்கமாகும்," என்று கூறினார்.

சர்வீசஸ் எக்ஸ்பிரஸ் நிறுவனம் தரவு மையங்கள் (டேட்டா சென்டர்ஸ்), தொழிற்துறைகள், கட்டிடங்கள், மின் கட்டமைப்புகள் (கிரிட்ஸ்) மற்றும் பிற முக்கியப் பிரிவுகளுக்கான தொழில்நுட்பங்கள், தீர்வுகள் மற்றும் நிபுணத்துவத்தை ஒருங்கிணைத்து, வாடிக்கையாளர்கள் தங்களது மின்சார சொத்துகளை அவற்றின் முழு ஆயுட்காலத்திலும் எவ்வாறு சிறப்பாக நிர்வகிக்கலாம், நவீனப்படுத்தலாம் மற்றும் மேம்படுத்தலாம் என்பதை நேரடியாகக் காட்டுகிறது. இதன் நடமாடும் வடிவம், இந்தத் திறன்களைத் தொழில்துறை மையங்களுக்கு நேரடியாகக் கொண்டு சென்று, நிறுவனங்கள் அதன் சேவை நிபுணர்களுடன் கலந்துரையாடவும், தங்களது செயல்பாட்டுச் சூழல்களில் இதன் பயன்பாடுகளை நேரில் ஆராயவும் ஒரு சிறந்த வாய்ப்பை உருவாக்குகிறது. சர்வீசஸ் எக்ஸ்பிரஸ் கர்நாடகா, கேரளா, தெலங்கானா, தமிழ்நாடு மற்றும்ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 120-க்கும் மேற்பட்ட நாட்களில் 20-க்கும் மேற்பட்ட நகரங்களுக்குப் பயணம் செய்து, தென்னிந்தியாவின் முக்கியத் தொழில்துறை சந்தைகளுக்கு ஸ்னைடர் எலக்ட்ரிக் நிறுவனத்தின் சேவைத் திறன்களை நேரடியாகக் கொண்டு செல்லும்.

## இந்தியன் வங்கியின் 30 செப்டம்பர் 2026 உடன் முடிவடைந்த காலாண்டிற்கான நிதி முடிவுகள்

சென்னை 16, அக்டோபர் 2026: மொத்த வணிகம் 14.22% அதிகரித்திருப்பது, அனைத்து பிரிவுகளிலும் எட்டப்பட்ட சிறப்பான வளர்ச்சியை பிரதிபலிக்கிறது.

சில்லறை, விவசாயம் மற்றும் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் (ஆர்ஏஎம்) ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட வலுவான வளர்ச்சியால் மொத்த கடன்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் (ஒய்ஓஒய்) 16.39% உயர்ந்துள்ளது.

39.36% என்ற ஆரோக்கியமான காசா (சிஏஎஸ்ஏ) விகிதத்தின் ஆதரவுடன் ன்ப்புத் தொகைகள் 12.50% அதிகரித்துள்ளன.

காலாண்டு அடிப்படையில் (க்யூஓக்யூ), வங்கி தனது மொத்த வைப்புத்தொகையை (சிடி உட்பட) ஜூன்'26-இல் இருந்த ரூ.1.62 லட்சம் கோடியிலிருந்து செப்டம்பர்'26-இல் ரூ.1.52 லட்சம் கோடியாக திட்டமிட்டு 5.60% குறைத்துள்ளது.

வங்கி புதிதாக ரூ.22,486 கோடி மதிப்பிலான எஃப்சிஎன்ஆர் (பி) வைப்புத்தொகையைத் திரட்டியுள்ளது. மேலும், ரூ.3806 கோடிக்கு ஓஎஃப்சிபி-யையும் திரட்டியுள்ளது.

மேம்பட்ட செயல்பாட்டுத் திறன், நிலையான நிகர வட்டி வரம்பு (என்ஐஎம்) மற்றும் சிறப்பான செலவின மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நிகர லாபம் முந்தைய ஆண்டின் இதே கால அளவைவிட 14.71% அதிகரித்துள்ளது.

செயல்பாட்டு லாபம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 46.58% உயர்ந்திருக்கிறது.

செப்டம்பர் 2026-ல் முடிவடைந்த காலாண்டில், வங்கியின் வட்டியல்லாத வருமானம் (என்ஐஐ) ஆண்டுக்கு ஆண்டு (ஒய்ஓஒய்) அடிப்படையில் 59% வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்து, ரூ.3,953 கோடியை எட்டியுள்ளது.

வங்கியின் செலவு மற்றும் வருவாய் விகிதம் ஜூன்'26-இல் 44.80%-ஆக இருந்ததிலிருந்து 723 அடிப்படைப் புள்ளிகள் (பிபிஎஸ்) முன்னேற்றம் கண்டு, செப்டம்பர்'26-இல் 39.25%-ஆக உள்ளது.

மொத்த வாராக் கடன் (ஜிஎன்பிஏ) 1.61% ஆகவும், நிகர வாராக்கடன் (என்என்பிஏ) 0.14% ஆகவும் முன்னேற்றம் கண்டு சொத்துகளின் தரம் மேலும் வலுவடைந்துள்ளது.

மொத்த பரிவர்த்தனைகளில் டிஜிட்டல் பயன்பாடு 96%-ஐ எட்டியிருப்பது, தொழில்நுட்பத்தால் முன்னெடுக்கப்படும் வாடிக்கையாளர்களின் செயல்பாட்டை வெளிப்படுத்துகிறது.

நிகர லாபம் ஆண்டுக்கு ஆண்டு (ஒய்ஓஒய்) 14.71% உயர்ந்து செப்டம்பர்'25-ல் இருந்த ரூ.3018 கோடியிலிருந்து செப்டம்பர்' 26-ல் ரூ.3462கோடியாக அதிகரித்துள்ளது.




செயல்பாட்டு லாபம் ஆண்டுக்கு ஆண்டு 46.58% உயர்ந்து செப்டம்பர்' 25-ல் இருந்த ரூ.4837 கோடியிலிருந்து செப்டம்பர்'26-ல் ரூ.7090 கோடியாக அதிகரித்துள்ளது.

செப்டம்பர்'25-ல் ரூ.6551 கோடியாக இருந்த நிகர வட்டி வருமானம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 17.83%உயர்ந்து செப்டம்பர்'26-ல் ரூ.7719 கோடியாக பதிவாகியிருக்கிறது.

செப்டம்பர்'26-ல் சொத்துகள் மீதான வருவாய் (ஆர்ஓஏ) 1.31%ஆகவும், பங்கு மூலதனம் மீதான வருவாய் (ஆர்ஓஇ) 19.65% ஆகவும் உள்ளது.

கடன்கள் மீதான வருவாய் (ஒய்ஓஏ) செப்டம்பர்' 26-ல் 8.17%ஆக இருந்தது.

## ஷ்யாம் மெட்டாலிக்ஸ் வழங்கும் 'சக்தி ஏக் ரூப் அனேக்' - சக்தியின் பல வடிவங்களைக் கொண்டாடும் ஒரு தனித்துவமான துர்கா பூஜை நிகழ்ச்சி

சென்னை 16, அக்டோபர் 2026: இந்த துர்கா பூஜையில், ஷ்யாம் மெட்டாலிக்ஸ் 'சக்தி ஏக், ரூப் அனேக்' மூலம் கொல்கத்தாவை உயிர்ப்பிக்கத் தயாராக உள்ளது. இது படைப்பாற்றல், கலாச்சாரம் மற்றும் கருணையின் ஒரு தனித்துவமான கொண்டாட்டமாகும், மேலும் இது அன்றாட வாழ்வில் சக்தியின் பல வெளிப்பாடுகளை ஆராய்கிறது. சக்தி, சுரக்ஷா மற்றும் சம்வேதனா ஆகிய பிராண்டின் முக்கிய மதிப்புகளில் வேரூன்றிய இந்த பிரச்சாரம், நகரம் முழுவதும் மறக்க முடியாத பண்டிகை அனுபவங்களை உருவாக்க, மனதை ஈர்க்கும் நிறுவல்கள், நம்பிக்கையூட்டும் கதைகள் மற்றும் அர்த்தமுள்ள சமூக முயற்சிகளை ஒன்றிணைக்கிறது.

பாரம்பரிய பூஜை கொண்டாட்டங்களின் பிரம்மாண்டத்தைத் தாண்டி, 'சக்தி ஏக், ரூப் அனேக்' மூன்று சக்தி வாய்ந்த வெளிப்பாடுகள் மூலம் சக்தியைக் கொண்டாடுகிறது: உம்மீத் (நம்பிக்கை), யாதீன் (நினைவுகள்) மற்றும் சுகூன் (ஆறுதல் மற்றும் கவனிப்பு). மனமார்ந்த விருப்பங்களைச் சாத்தியங்களாக மாற்றுவது, வங்காளத்தின் கலை மற்றும் கலாச்சாரத்தைக் கொண்டாடுவது, வங்காளக் காவல்துறையின் அயராத முயற்சிகளை அங்கீகரிப்பது என இந்த முன்னெடுப்பு, ஒரு எளிய ஆனால் சக்திவாய்ந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கிறது: சக்தி என்பது வலிமையின் சின்னம் மட்டுமல்ல, அது கனவுகளை வளர்க்கும், நீடித்த நினைவுகளை உருவாக்கும், மிகவும் தேவைப்படும்போது ஆறுதல் அளிக்கும் ஒரு ஆற்றலாகும்.




இந்தப் பிரச்சாரத்தின் மையத்தில் 'சக்திச் சுவர்' உள்ளது. இது எஸ்இஎல் டைகர் டிஎம்டி கம்பிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஒரு தனித்துவமான அமைப்பாகும், இதில் துர்கா தேவியின் பிரதான உருவமும் இடம்பெற்றுள்ளது. பார்வையாளர்கள் தங்கள் விருப்பங்களை இந்தச் சுவரில் பதிவு செய்யலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட விருப்பங்களை நிறைவேற்றி, "கனவுகள் நனவாகும்" என்ற தனது வாக்குறுதியை ஷ்யாம் மெட்டாலிக்ஸ் நிறுவனம் உயிர்ப்பிக்கும். இந்த முன்னெடுப்பு நம்பிக்கையின் மாற்றும் சக்தியைக் கொண்டாடுகிறது மற்றும் அர்த்தமுள்ள ஆதரவு எவ்வாறு லட்சியங்களை நனவாக்க உதவும் என்பதை நிரூபிக்கிறது.

பண்டிகை அனுபவத்தை மேலும் மெருகூட்டும் வகையில், 'சக்தி சுரங்கப்பாதை' பார்வையாளர்களுக்குக் கண்ணைக் கவரும் காட்சிகள் மற்றும் ஊடாடும் செல்ஃபி அனுபவங்கள் மூலம் வங்காளத்தின் கலை, கலாச்சாரம் மற்றும் துர்கா பூஜையின் உணர்வை முழுமையாகக் கொண்டாடும் ஒரு அனுபவத்தை வழங்கும்.

பார்வையாளர்கள் சக்தியின் பல்வேறு கலாச்சார வெளிப்பாடுகளுடன் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, அவர்களின் பண்டிகைக் கொண்டாட்டத் தருணங்களைப் படம்பிடித்துக்கொள்ளக் கூடிய ஒரு மறக்க முடியாத இடத்தை உருவாக்குவதே இந்த அமைப்பின் நோக்கமாகும்.

## பிரதமர் நரேந்திர மோடி, லடாக்கில் ரூ.3,350 கோடி மதிப்பிலான ஐந்து வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்

சென்னை 16, அக்டோபர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி லடாக்கில், ரூ.3,350 கோடி மதிப்பிலான ஐந்து முக்கிய வளர்ச்சித் திட்டங்களைத் காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்து நாட்டிற்கு அர்ப்பணித்தார். அப்பகுதியின் வளர்ச்சியில் புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் வகையில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், மின்சாரம், குடிநீர் விரியோகத்தை உறுதி செய்தல், பழமையான பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்ட பல்வேறு முக்கியத் திட்டங்களை அவர் தொடங்கி வைத்தார். ஜன்ஸ்காரில் பனிப்பொழிவுக்கு இடையே மூவர்ணக் கொடியை அசைத்த மக்களின் உற்சாகம் குறித்து குறிப்பிட்ட பிரதமர், இந்தக் கடினமாக பணிகளைச் சிறப்பாக நிறைவு செய்த பொறியாளர்கள், தொழிலாளர்கள், உள்ளூர் பணியாளர்கள், எல்லைச் சாலைகள் அமைப்பு ஊழியர்கள் ஆகியோருக்கு நன்றி கூறினார். இத்திட்டங்களுக்காக லடாக் மக்கள் அனைவருக்கும் தமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதாக திரு மோடி தெரிவித்தார்.

லே-வில் உள்ள குஷோக் பகுலா ரின்போச்சே விமான நிலைய முனையத்திற்கு தான் ஏற்கனவே அடிக்கல் நாட்டியதை நினைவுகூர்ந்த பிரதமர், ரூ.650 கோடி மதிப்பிலான இப்புதிய முனையத்தைத் திறந்து வைத்தது மகிழ்ச்சியளித்ததாகக் கூறினார். விமானங்களின் செயல்பாட்டுத் திறனை மூன்று மடங்காக அதிகரிப்பதோடு வருடாந்திர பயனாளிகள் வரவு எண்ணிக்கையை 10 லட்சத்திலிருந்து 35 லட்சமாக இது அதிகரிக்கிறது. கடுமையான பருவநிலைக்கு ஏற்ப சூரிய சக்தியுடன் புவி வெப்பமூட்டும் வசதி யைக் கொண்ட இந்தியாவின் முழுமையான முனையம் இதுவாகும். இது சுற்றுச்சூழலை பாதுகாக்கும் அதே சூழலில், உள்ளூர் சுற்றுலாவையும் ஊக்குவிக்கும். உள்ளூர் சுற்றுச்சூழலை முழுமையாக பாதுகாக்கும் அதே வேளையில் லடாக்கில் உள்கட்டமைப்பை உருவாக்குவதே தங்களுடைய நோக்கம் என்று திரு மோடி கூறினார்.

பிராந்தியப் போக்குவரத்து வசதியின் உத்தி சார்ந்த பொருளாதார முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த பிரதமர், ரூ.2,500 கோடி மதிப்பிலான நிம்மு - பதும் - தார்சா சாலையை நாட்டிற்கு அர்ப்பணித்தார். இது சாலைவழி பயண நேரத்தை 12 மணி நேரத்திலிருந்து 3 மணி நேரமாக குறைக்கிறது. பயணிகளின் நேரத்தைச் சேமிப்பது மட்டுமின்றி இந்த முக்கியப் பாதை உள்ளூர் வணிகத்தையும் பெருமளவில் ஊக்குவிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஸ்ரீநகர் - லே-யில் ஏற்கனவே மின் பரிமாற்றப் பாதையைத் திறந்து வைத்ததையடுத்து, தற்போது ஹனு நீர்மின் திட்டத்தையும் அதனோடு தொடர்புடைய மின் பரிமாற்றக் கட்டமைப்பையும் பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்தார். அத்துடன், புகா பள்ளத்தாக்கில் நவீன மின் உற்பத்தி முன்மு"ற்சிகள் நடைபெற்று வருவதையும் அவர் எடுத்துரைத்தார்.

தடையற்ற மின்சாரம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைக்கும் என்றும் வீடுகளுக்கு மின்சாரம் வழங்குவதுடன் குழந்தைகளின் கல்வி, சுகாதார வசதி கள், சிறு தொழில்கள் ஆகியவற்றை மேம்படுத்த உதவும் என்று அவர் விவரித்தார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளி, அக்டோபர் 16, 2026

## மைத்ரி மூவி மேக்கர்ஸ் நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் வழங்கும் 'இன்று நேற்று நாளை', 'அயலான்' படங்களின் இயக்குநர் ரவிக்குமார் இயக்கத்தில், பிளாக்பஸ்டர் நாயகன் சூரி நடிக்கும் புதிய திரைப்படம் பிரம்மாண்ட பூஜையுடன் தொடங்கியது!

சென்னை 16 அக்டோபர் 2026: வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களைத் தேர்ந்தெடுத்து, விமர்சன ரீதியாகவும் வணிக ரீதியாகவும் வெற்றி பெற்றுவரும் நடிகர் சூரி, பிளாக்பஸ்டர் பொழுதுபோக்குத் திரைப்படங்களைத் தயாரிப்பதில் பெயர் பெற்ற தயாரிப்பு நிறுவனமான மைத்ரி மூவிக்கர்ஸ் தயாரிப்பில் நடிக்கும் புதிய படம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் சூரி கதாநாயகனாக நடிக்கும் ஏழாவது திரைப்படம் இது. நவீன் யெர்னேனி மற்றும் ஒய். ரவி சங்கர் தலைமையிலான மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்கும் நான்காவது தமிழ்த் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் திரைப்படத்திற்கு 'சூரி 7' என்ற தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தின் தொடக்க விழா அக்டோபர் 14-ஆம் தேதி சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. தமிழ் திரையுலகைச் சேர்ந்த பல முக்கியப் பிரபலங்கள் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

நடிகர் சிவகார்த்திகேயன் கிளாப் அடிக்க, தயாரிப்பாளர் எல்ரெட் குமார் கேமராவை இயக்கி படப்பிடிப்பை தொடங்கி வைத்தார்.

இந்த விழாவில் தயாரிப்பாளர் எல்ரெட் குமார், இயக்குநர் மதிமாறன், லைகா புரொடக்ஷன்ஸ் தமிழ்க் குமரன், இயக்குநர் கீர்த்திஸ்வரன், பாந்தம் பிலிம்ஸ் நிறுவனத்தின் பிஜாய் அற்புதராஜ், இயக்குநர்கள் ஏ.ஆர்.கே. சரவணன், நலன் குமாரசாமி, மித்ரன், வெற்றிமாறன், ராம்குமார் மற்றும் தயாரிப்பாளர் அருண் விஸ்வா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

'இன்று நேற்று நாளை', 'அயலான்' போன்ற வெற்றிப் படங்கள் மூலம் தமிழ்



சினிமாவில் தனக்கென தனியிடம் பிடித்த இயக்குநர் ரவிக்குமார் இப்படத்தை இயக்குகிறார்.

புதுமையான கதைக் களங்களை நகைச்சுவையுடனும், அனைத்து தரப்பு ரசிகர்களும் ரசிக்கும் வகையிலும் படங்களை தருவதில் பெயர் பெற்ற இயக்குநர் ரவிக்குமார் சூரியுடன் கைகோத்திருப்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிளாக்பஸ்டர் திரைப்படங்களை தயாரித்து வரும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தமிழிலும் வெற்றிப்படங்களை தயாரித்து வருகிறது. இந்நிறுவனத்தின் முதல் தமிழ்த் திரைப்படமான 'குட் பேட் அக்லி' பிளாக்பஸ்டர் வெற்றியைப் பெற்றதைத் தொடர்ந்து, 'டியூட்', 'மொத ராத்திரி' உள்ளிட்ட படங்களுக்கும் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த ஊக்கமும் ரசிகர்களின் அன்பான வரவேற்பும், தமிழில் மேலும் பல திரைப் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை நிறுவனத்துக்கு ஏற்படுத்தியுள்ளது.

இப்படத்தில் சூரிக்கு ஜோடியாக ரஜிஷா விஜயன் நடிக்கிறார். இப்படத்தின் தலைப்பு, மற்ற நடிகர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் குறித்த விவரங்கள் உள்ளிட்ட தகவல்கள் விரைவில் அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்படும்.

## கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாகப் பங்களிக்கிறன - குடியரசுத்தலைவர்

சென்னை 16 அக்டோபர் 2026: ஆந்திரப்பிரதேச மாநிலம் விஜயவாடாவில் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகமும், ஆந்திரப்பிரதேச அரசும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கிராமப்புற கைவினைஞர்கள் சங்க பொருட்கள் விற்பனை தேசிய சரஸ் திருவிழாவில் குடியரசுத்தலைவர் இன்று கலந்துகொண்டார். அப்போது, சரஸ் கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டு லட்சாதிபதி சகோதரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத்தலைவர் வேளாண் துறையில் கிராமப்புறப் பெண்கள் மிகவும் முக்கியப் பங்காற்றுவதாகத் தெரிவித்தார். சுயஉதவிக் குழுக்கள் மூலம் அவர்கள் நிதி, தொழில்நுட்பம், சமூக ரீதியான அதிகாரமளித்தல் ஆகியவற்றிற்கு மேம்படுத்தியுள்ளதாக அவர் கூறினார். மகளிரின் தொழில்முனைவு ஊக்கமளிக்கும் வகையில் வளர்ச்சியடைந்து வருவதையும் பொருளாதாரம் சார்ந்த முடிவெடுக்கும் நடவடிக்கைகளில் கிராமப்புறப் பெண்களின் பங்களிப்பு அதிகரித்திருப்பது குறித்தும் மகிழ்ச்சித் தெரிவித்தார். நாட்டின் சமமான, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியம் என்று குறிப்பிட்டார்.

கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாகப் பங்களித்து வருவதாக குடியரசுத்தலைவர் சுட்டிக்காட்டினார். கடந்த 12 ஆண்டுகளில் இக்குழுக்களுடன் இணைந்த மகளிரின்



எண்ணிக்கை 10 கோடியைக் கடந்துள்ளது என்றும், அவர்கள் 90 லட்சத்திற்கும் மேற்பட்ட சுயஉதவிக் குழுக்களில் இணைந்து செயல்படுவதாகவும் கூறினார். அவர்கள் தங்களுடைய குடும்பத்தினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு உரிய பங்களிப்பை அளிப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற பங்கேற்பு மகளிரை மையமாகக் கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய கிராமப்புற வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது என்றும், கூட்டு முயற்சியிலான தொழில்முனைவுக்கான வாய்ப்புகளைப் பெருமளவில் விரிவுபடுத்தியுள்ளதாகவும் கூறினார்.

லட்சாதிபதி சகோதரி முன்முயற்சி மூலம் கிராமப்புறப் பெண்களின் அதிகாரமளித்தலுக்கு மத்திய அரசு தனித்துவமிக்க உத்வேகத்தையும் வாய்ப்பையும் அளித்துள்ளதாக குடியரசுத் தலைவர் கூறினார். டிஜிட்டல் சேவைகள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற பல்வேறு நவீனத் துறைகளில் அவர்களின் பங்கேற்பு அதிகரித்ததன் மூலம் கிராமப்புறப் பெண்களுக்கான திறன் மேம்பாட்டிற்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## ஜெயிலர் 2 - திரைப்பட விமர்சனம் - சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் ஸ்டைல், மாஸ், ஸ்வாக் - ரசிகர்களுக்கு ஒரு பிரம்மாண்டமான கொண்டாட்டம்

சென்னை 16, அக்டோபர் 2026: சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் தனித்துவமான ஸ்டைல், மாஸ் திரை ஆளுமை, அதிரடியான ஆக்‌ஷன் மற்றும் பிரம்மாண்டமான திரையரங்க அனுபவத்தை எதிர்பார்க்கும் ரசிகர்களுக்கு ஜெயிலர் 2 ஒரு மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள திரைப்படம்!

ரஜினிகாந்த், இயக்குநர் நெல்சன் மற்றும் இசையமைப்பாளர் அனிருத் ஆகியோரின் கூட்டணி இந்தப் படத்தின் மிகப்பெரிய பலமாக அமைந்துள்ளது. வலுவான நட்சத்திர பட்டாளம், அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பக் குழு மற்றும் பிரம்மாண்டமான தயாரிப்பு எனப் பல அம்சங்கள் படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்கின்றன.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் - ஸ்டைலுக்கு இன்னொரு பெயர்!

ரஜினிகாந்த் திரையில் தோன்றும் தருணமே ரசிகர்களுக்கு ஒரு தனி உற்சாகத்தை ஏற்படுத்தும். அவருடைய ஸ்டைலான நடை, தனித்துவமான வசன உச்சரிப்பு, மாஸ் உடல்மொழி மற்றும் திரையை ஆளும் ஆளுமை ஆகியவை அவரை இந்திய சினிமாவின் மிகப்பெரிய நட்சத்திரங்களில் ஒருவராக நிலைநிறுத்தியுள்ளன.

ஜெயிலர் 2 படத்தின் மீதான மிகப்பெரிய எதிர்பார்ப்பும் ரஜினிகாந்தின் இந்தத் தனித்துவமான திரை ஆளுமையை மீண்டும் ரசிக்க வேண்டும் என்பதுதான். அவருடைய ரசிகர்களுக்கு மறக்க முடியாத மாஸ் தருணங்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை இப்படம் ஏற்படுத்துகிறது.

நெல்சன் இயக்கம் - வித்தியாசமான கமர்ஷியல் அணுகுமுறை!

நெல்சனின் இயக்கப் பாணியில் நகைச்சுவை, வித்தியாசமான கதாபாத்திரங்கள், டார்க் ஹியூமர் மற்றும் ஸ்டைலான காட்சியமைப்பு ஆகியவை முக்கியமான அம்சங்களாக இருக்கின்றன.

ரஜினிகாந்தின் மாஸ் ஆளுமையுடன் நெல்சனின் தனித்துவமான இயக்க அணுகுமுறை இணைவது ரசிகர்களுக்கு சுவாரஸ்யமான அனுபவத்தை உருவாக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. ஆக்‌ஷன், நகைச்சுவை, பரபரப்பு மற்றும் உணர்ச்சிகரமான தருணங்கள் சரியான அளவில் அமைந்தால், படம் ஒரு விறுவிறுப்பான கமர்ஷியல் என்டர்டெய்னராக அமைய வாய்ப்புள்ளது.

அனிருத் இசை - தியேட்டரை அதிர வைக்கும் எதிர்பார்ப்பு!

ரஜினிகாந்த் படங்களில் இசைக்கும் பின்னணி இசைக்கும் எப்போதும் ஒரு முக்கிய இடம் உண்டு. அந்த வகையில் அனிருத் ரவிச்சந்தரின் பங்களிப்பு ஜெயிலர் 2 படத்தின் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாக இருக்கிறது.

தொழில்நுட்பக் குழு - பிரம்மாண்டமான திரை அனுபவத்திற்கான கூட்டணி!

படத்தின் தொழில்நுட்பக் குழுவும் கவனத்தை ஈர்க்கிறது. ஒளிப்பதிவாளர் விஜய்



கார்த்திக் கண்ணன், படத்தொகுப்பாளர் ஆர். நிர்மல், கலை இயக்குநர் டி.ஆர்.கே. கிரண் மற்றும் சண்டைப் பயிற்சி இயக்குநர் சேத்தன் டி'செளசா ஆகியோர் படத்தின் தொழில்நுட்பத் தரத்தில் முக்கியப் பங்கு வகிக்கும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

பல்லவி சிங் மற்றும் முத்துல் ஹஃபீஸ் ஆடை வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்கின்றனர். சவுண்ட் மிக்ஸிங்கில் சுரேன் ஜி, சவுண்ட் டிசைனில் சுரேன் ஜி மற்றும் எஸ். அழகியகூத்தன், கலரிஸ்டாக ஆண்ட்ரியாஸ் புருக்ள் ஆகியோர் பணியாற்றுகின்றனர்.

'ஜெயிலர் 2' படக்குழு விவரங்கள்:

நடிகர்கள்:

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், எஸ்.ஜே. சூர்யா, மிதுன் சக்ரவர்த்தி, சூரஜ் வெஞ்சாரமூடு, வித்யா பாலன், ரம்யா கிருஷ்ணன், யோகி பாபு, மிர்னா, மாஸ்டர் ரித்விக், ஜதின் சர்னா, நமோ நாராயணா, பிஜோர்ன் சுர்ராவ், அன்னா ராஜன், பி. எல். தேனப்பன், ஜாபர் சாதிக், பதம் குமார், அபேக்ஷா போர்வால், தமிழ், சரவண வேல், பகவதி பெருமாள், கோட்டயம் நசீர், சுனில் சுகதா, சுஜித் சங்கர், ஹக்கீம் ஷாஜஹான், வினீத் தட்டில் டேவிட், ராமச்சந்திரன் துரைராஜ்.

சிறப்புத் தோற்றத்தில்:

மோகன்லால், சிவராஜ்குமார், ஜாக்கி ஷெராஃப், பூர்ணா, ராஜேஷ் மாதவன், நோரா ஃபதேஹி.

தொழில்நுட்பக் குழு:

தயாரிப்பு நிறுவனம்: சன் பிக்சர்ஸ், கதை, திரைக்கதை மற்றும் இயக்கம்: நெல்சன், இசை: அனிருத், ஒளிப்பதிவு: விஜய் கார்த்திக் கண்ணன், படத்தொகுப்பு: ஆர். நிர்மல், கலை இயக்கம்: டி.ஆர்.கே. கிரண், சண்டைப் பயிற்சி: சேத்தன் டி'சோசா, ஆடை வடிவமைப்பு: பல்லவி சிங், முதுல் ஹஃபீஸ், ஒலிக்கலவை: சுரேன் ஜி., ஒலி வடிவமைப்பு: சுரேன் ஜி., எஸ். அழகியகூத்தன், வண்ணத் திருத்தம்: ஆண்ட்ரியாஸ் புருகல், டிஐ (ஞிமி) பணிகள்: அன்னபூர்ணா ஃஷிடுடியோஸ், விஷுவல் எஃபெக்ட்ஸ் தயாரிப்பாளர்: சந்தோஷ் ராஜு, ஒப்பனை: பட்டணம் ரஷீத், சி. ஹரிநாத், படப்பிடிப்புத் தளப் புகைப்படங்கள்: வி. சித்தராசு, விளம்பர வடிவமைப்பு: கபிலன் செல்லையா, மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ், தயாரிப்புக் கட்டுப்பாட்டாளர்கள்: டி. ரமேஷ் குச்சிராயர், ஆர். எஸ். சுரேஷ் மணியன், செயல் தயாரிப்பாளர்: சுனில் ரெட்டி.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்